கரூரிலிருந்து குளித்தலை வழியாக சென்னைக்கு மீண்டும் குளிர் சாதனப் பேருந்து!

குளித்தலை தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி!

சட்டப்பேரவையில் இரா.மாணிக்கம் பேச்சு!

சென்னை, ஏப். 28 - சட்டப்பேரவையில் பதிவுத் துறை மற்றும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையில் குளித்தலை தொகுதி உறுப்பினர் இரா.மாணிக்கம் பேசுகையில், குளித்தலை தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திய முதல் வருக்கு நன்றி என்று குறிப்பிட்டார்.

பேரவையில் பத்திரப் பதிவு மானியக் கோரிக்கையில் குளித்தலை இரா. மாணிக்கம் பேசியதாவது: -

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழுக்காகவும், தமிழருக்காகவும் தமிழ் நாட்டு மக்களுக்காகவும், தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த தலைவர் குளித்தலை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக முதன் முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டது முதல் நின்ற தொகுதிகளில் எல்லாம் வென்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்று அப்பா என அழைத்து கொள்ளட்டுமா என கலங்கியவர் இன்று தமிழ்நாட்டுப் பிள்ளைகளால் உரிமையோடு அன்பாக அப்பா என அழைக்கப் பெறும் எங்கள் முதல்வரே, (மேசையைத் தட்டும் ஒலி) அஞ்சி நடுங்கி, கூனிக் குருகி நிற்பவர்கள் மத்தியில் சுயமரியாதையோடு தமிழ்நாடு வெல்லும் என்று சொன்னதை நிறைவேற்றி இனி என்றென்றும் எங்கள் தமிழ்நாடு வெல்லும் என்று வென்று காட்டிய தலைவரே! (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கான உரிமைகளை பெற்றுத் தந்துள்ள சமத்துவ நாயகரே!

இந்தியாவுக்கே கலங்கரை விளக்காய் திகழ்பவரே! தாய்நாட்டின் தன்னிகரில்லா தலைவரே! முதல்வர் அவர்களே, தங்களைப் பணிந்து வணங்கி மகிழ்கிறேன். வெற்றியாளர்கள் பிரச்சினைகளை நினைப்பதில்லை. தீர்வுகளை உருவாக்குகிறார்கள், ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கான இலக்கை நிர்ணயம் செய்து, அதைப் பூர்த்தி செய்து முடித்து, உலகமே வியந்து பாராட்டும் அளவிற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினை உயர்த்திக் காட்டியவரே, கழகத் தலைவருக்கு துணையாக, தூணாக நிற்கும் எங்கள் சின்னவரே, துணை முதல்வர் அவர்களே, தங்களை வணங்கி மகிழ்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்மதான் ஜெயிக்கிறோம், நம்ம மட்டும்தான் ஜெயிக்கிறோம் என வெற்றி முழக்கமிட்டு, தான் கால் பதித்த இடமெல்லாம் கழகத்தின் வெற்றிக் கொடியை நாட்டி வருகின்ற திராவிட பேரரசர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் போர்ப் படை தளபதி, கொங்கு மண்டலத்தைக் கழகத்தின் எஃகு கோட்டையாக்கி தொண்டர்களின் பாதுகாவலனாய் விளங்கி வருகின்ற எங்கள் அமைச்சர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும், அவை முன்னவர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை தேர்ந்தெடுத்த பெருமைமிக்க குளித்தலை தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக இந்தப் பேரவையில் பங்குபெறுகின்ற வாய்ப்பினை எளியவனாகிய எனக்கு வழங்கி இருக்கின்ற குளித்தலை தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்கு அயராது பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சியினருக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் மிகுந்த பணிவோடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என் நினைவில் வாழும் என்னைப் பெற்றெடுத்த தந்தை இராஜரத்தினம்தாயார் கமலம் ஆகிய தெய்வங்களை வணங்கி குடும்பத்தார் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் குளித்தலை சட்டமன்ற தொகுதியில் நிறைவேற்றப்பட்ட/அறிவிப்பு வெளியிடப்பட்ட திட்டங்களை இங்கே பதிவு செய்வதற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

குளித்தலை தொகுதியில் திராவிட மாடல் ஆட்சியில் மிளிரும் மின்சாரத் துறையின் மூலமாக நிறுவப்பட்ட விநியோக மின் மாற்றிகள் 328, புதிதாக நிறுவப்பட்ட உயரழுத்த மின் பாதை 160 கிலோ மீட்டர், புதிதாக நிறுவப்பட்ட தாழ்வழுத்த மின் பாதை 332 கிலோ மீட்டர், துணை மின் நிலையத்தில் புதிதாக நிறுவப்பட்ட கூடுதல் மின் மாற்றிகள் இரண்டு,

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தெரு விளக்கு, வீடு, தொழில், வணிகம் மற்றும் இதர மின் இணைப்புகள் என மொத்தம் புதிதாக வழங்கப்பட்ட இணைப்புகள் 7,643, விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் புதிதாக வழங்கப்பட்ட விவசாய இலவச இணைப்புகள் 40, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவிருக்கின்ற தோகமலை ஒன்றியம் சின்னப் பனையூரில் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் ஒரு புதிய 110/11KV துணை மின் நிலையம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். குளித்தலை நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான குளித்தலை நகரப் பகுதிக்கென்று ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, அதனை அமைப்பதற்கு ஏதுவான இடமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இந்த நிதியாண்டிலேயே புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு அமைச்சர் அவர்களை தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியில் குளித்தலை தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கு ஆணையிட்ட திராவிட பேரரசர் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும், திட்டங்களைப் பரிந்துரைத்து பெற்றுக் கொடுத்த எங்கள் மாவட்டச் செயலாளர் V. செந்தில்பாலாஜி அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நங்கவரம் பகுதியில் புதிய காவல் நிலையம்!

குளித்தலை தொகுதி, நங்கவரம் பகுதியில் புதிய காவல் நிலையம் அமைத்துக் கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு நங்கவரம் பகுதி மக்களின் சார்பாக என் நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த அதிமுக அரசால் நீக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரை மீண்டும் குளித்தலை அரசு கலைக் கல்லூரிக்கு சூட்ட ஆணை பிறப்பித்து, மீண்டும் டாக்டர் கலைஞர் அவர்களின் பெயரை கல்லூரிக்கு சூட்டியதற்காகவும், திராவிட மாடல் ஆட்சியில் மட்டும் கலைஞர் அரசு கலைக் கல்லூரிக்கென ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்களையும் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளித்தலை தொகுதியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறு விளையாட்டரங்கம் அமைக்க ஆணையிட்ட துணை முதலமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குளித்தலை தொகுதி மக்களின் வசதிக்காக குளித்தலை அரசு மருத்துவமனையானது நம் திராவிட மாடல் ஆட்சியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்டு, ரூ.40 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

குளித்தலை தொகுதியில் உள்ள அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கும், காவிரி குடிநீர் கிடைத்திடும் வகையில் புதிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டதற்காக நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட அய்யர்மலை ரோப் கார் சேவையை மீண்டும் நிறுவி, கடந்த ஜூலை 24 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து சிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களின் வசதிக்காக திராவிட மாடல் ஆட்சியில் குளித்தலை தொகுதியில் சுமார் ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டடங்கள், பள்ளி சீரமைப்புப் பணிகள் மற்றும் பள்ளி தளவாட சாமான்கள் வழங்கப்பட்டதற்காக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியில், நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகியவற்றின்மூலம் குளித்தலை தொகுதியில் மட்டும் சுமார் ரூ.165 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்படுத்தப்பட்டு, புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்காக துறை சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் குளித்தலை தொகுதியில் சுமார் ரூ.30 கோடி மதிப்பீட்டில் 15க்கும் மேற்பட்ட பாலங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றும், சில பணிகள் நடைபெற்றும் வருகின்றன. அதற்காக பொதுப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களுக்கு குட முழுக்கு!

8 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்த நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிவுற்றும், சில பணிகள் நடைபெற்றும் வருவதற்கும் வித்திட்ட இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குளித்தலை பேருந்து நிலையம் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்டதற்கும், குளித்தலை நகரத்திற்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் மின் மயானம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

குளித்தலை தொகுதியில் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தில் சுமார் 290 பயனாளிகளுக்கு ரூ.9 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை தொடர்பான எனது கருத்துகளுக்கு வருகிறேன். திராவிட மாடல் ஆட்சியில் மகளிரின் வாழ்வில் விளக்கேற்றும் திட்டம் என்று அனைவராலும் பாராட்டப்படுகிறகின்றேன்.

குளித்தலை தொகுதி மக்களின் வசதிக்காக குளித்தலை அரசு மருத்துவமனையானது நம் திராவிட மாடல் ஆட்சியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்டு, ரூ.40 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

குளித்தலை தொகுதியில் உள்ள அனைத்து ஊரக குடியிருப்புகளுக்கும், காவிரி குடிநீர் கிடைத்திடும் வகையில் புதிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவிக்கப்பட்டதற்காக நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட அய்யர்மலை ரோப் கார் சேவையை மீண்டும் நிறுவி, கடந்த ஜூலை 24 அன்று காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து சிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களின் வசதிக்காக திராவிட மாடல் ஆட்சியில் குளித்தலை தொகுதியில் சுமார் ரூ.20 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டடங்கள், பள்ளி சீரமைப்புப் பணிகள் மற்றும் பள்ளி தளவாட சாமான்கள் வழங்கப்பட்டதற்காக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியில், நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகியவற்றின்மூலம் குளித்தலை தொகுதியில் மட்டும் சுமார் ரூ.165 கோடி மதிப்பீட்டில் சாலைகள் மேம்படுத்தப்பட்டு, புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்காக துறை சார்ந்த அமைச்சர் பெருமக்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் குளித்தலை தொகுதியில் சுமார் ரூ.30 கோடி மதிப்பீட்டில் 15க்கும் மேற்பட்ட பாலங்கள் கட்டும் பணிகள் முடிவுற்றும், சில பணிகள் நடைபெற்றும் வருகின்றன. அதற்காக பொதுப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களுக்கு குட முழுக்கு!

8 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்த நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முடிவுற்றும், சில பணிகள் நடைபெற்றும் வருவதற்கும் வித்திட்ட இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குளித்தலை பேருந்து நிலையம் ரூ.76 இலட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்டதற்கும், குளித்தலை நகரத்திற்கு ரூ.15 கோடி மதிப்பீட்டில் மின் மயானம் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கும் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

குளித்தலை தொகுதியில் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தில் சுமார் 290 பயனாளிகளுக்கு ரூ.9 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை தொடர்பான எனது கருத்துகளுக்கு வருகிறேன். திராவிட மாடல் ஆட்சியில் மகளிரின் வாழ்வில் விளக்கேற்றும் திட்டம் என்று அனைவராலும் பாராட்டப்படுகிறகின்றேன்.

விடியல் பயணத்திட்டத்தின் மூலம் மகளிர் பயணக் கட்டணமில்லாமல் பயணித்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, சமூகத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவியாக உள்ளது. விடியல் பயணத் திட்டத்தின்மூலம் மகளிர் பயணிகள் தங்கள் மாதாந்திர செலவில் ரூ.888 சேமிக்கின்றனர் என தமிழ்நாட்டில் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதுவரை 625 கோடி பயண நடைகள் மகளிரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது மிகப் பெரிய சாதனையாகும்.

திராவிட மாடல் ஆட்சியின் சிறப்புத் திட்டமான மகளிரின் விடியல் பயணத் திட்டம் உலகமே வியந்து பாராட்டும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறப்பான இந்த விடியல் பயணத் திட்டத்தினை இந்தியத் திருநாட்டின் பிற மாநிலங்களும் செயல்படுத்தத் தொடங்கியுள்ளதால், இந்தியாவிற்கே முன்மாதிரியான திட்டங்களைத் தருவதில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் அவர்களை நாடே வியந்து பாராட்டுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதாரண நகரப் பேருந்துகளில் மகளிர், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களும் கட்டணமில்லாமல் பயணித்து கழக ஆட்சியைப் பாராட்டி மகிழ்கின்றனர். கடந்த ஆட்சியாளர்களால் நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடங்களில் திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் பயன்பாட்டிற்காக பேருந்துகள் மீண்டும் இயக்கப்படுவதோடு, புதிய வழித்தடங்கள் மற்றும் நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இதில் குறிப்பாக குளித்தலை தொகுதியில் மட்டும் நீட்டிக்கப்பட்ட வழித்தடங்களில் 14 பேருந்துகளும், பழைய பேருந்துகளுக்கு பதிலாக 7 புதிய பேருந்துகளும், ஒரு புதிய பேருந்து வழித்தடத்தில் இயக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட மாடல் ஆட்சியில் விழாக் காலங்களில் சென்னை மற்றும் முக்கிய நகரங்களுக்குச் சிறப்புப் பேருந்துகள் இயக்கி மக்களுக்காக சிறந்த சேவையை வழங்கி வருகிறது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம். பயணிகளின் குறைத் தீர்க்க ஒருங்கிணைந்த கட்டணமில்லாத் தொலைப் பேசி எண் 149 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் பயன்பாட்டிற்காக ரூ.2,400 கோடி மதிப்பீட்டில் 5,000 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. ஜெர்மன் வளர்ச்சி வங்கி நிதியுடன் சுமார் 2,166 டீசல் பேருந்துகள் மற்றும் 500 மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படுகிறது. திராவிட மாடல் ஆட்சியில் அரசு விரைவுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பெண்களுக்கென பிரத்யேக இருக்கைகள், வலைத்தளத்தின்மூலம் பயணச் சீட்டு முன்பதிவு செய்யும் திட்டம்,

சென்னையில் "சிங்காரா சென்னை அட்டை" போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. 5 வயதுக்குட்பட்டக் குழந்தைகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் திட்டம், இணைய வழிப் பயணச் சீட்டு வாயிலாக முன்பதிவு செய்த பயணிகளுக்கு 10% தள்ளுபடியான இருவழிப் பயணச் சீட்டுகள், 5 முறைக்கு மேல் பயணம் செய்யும்போது அடுத்தத் தொடர் பயணங்களுக்கு 50% கட்டணச் சலுகைப் போன்ற பல்வேறு திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கின்றது.

கோடை கால சிறப்பு சுற்றுலாப் பேருந்து!

திராவிட மாடல் ஆட்சியில் சுற்றுலா பயணிகளுக்கு கோடைகாலச் சிறப்பு சுற்றுலாப் பேருந்து வசதி, நவகிரக கோயில்களுக்குச் செல்ல சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டு குறைந்தக் கட்டணத்தில், பொதுமக்கள் தங்கள் குடும்பத்தினருடன் பயணித்து சுற்றுலாத் தலங்களைக் கண்டுகளிப்பதோடு நவகிரக கோயில்களுக்கு சென்று வருகின்றனர். இது பொதுமக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துப் பேருந்துகளிலும் புதுப்பொலிவுடன் திருவள்ளுவர் படம் மற்றும் திருக்குறள் அதன் விளக்கவுரையுடன் பொருத்தப்பட்டுள்ளது என்பதை பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 17 தேசிய விருதுகள், விபத்தில்லாமல் பணி புரிந்தமைக்காக, தமிழ்நாட்டின் 14 ஓட்டுநர்களுக்கு Heroes on the Roads போன்ற பல்வேறு விருதுகளைத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் பெற்றுள்ளது. பணியின் போது இறந்தத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல நிதி ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.5.00 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வாரிசு தாரர்களுக்கு கருணையின் அடிப்படையில் பணி நியமனம், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வுகளில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவ, மாணவிகளுக்கு முறையே ரூ.1,500, ரூ.1,000 மற்றும் ரூ.500 என ஆண்டுதோறும் பரிசுத் தொகை வழங்குதல், அரசு மருத்துவ மனைகளில் பணியாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை முகாம்கள், வங்கிகளுடன் காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் திராவிட மாடல் ஆட்சியிலே செயல்படுத்தப்பட்டு வருவதால் பணியாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கின்றனர்.

கரூரிலிருந்து குளித்தலை வழியாக சென்னைக்கு பேருந்து!

போக்குவரத்துச் சார்ந்த சில கோரிக்கைகள், கரூரிலிருந்து குளித்தலை வழியாக சென்னை வரை மறு மார்க்கத்திலும் இயக்கப்பட்ட குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட அரசு விரைவு பேருந்து கடந்த ஆட்சியால் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, அந்தப் பேருந்தினை மீண்டும் இயக்க வேண்டுமாய் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். குளித்தலை நகரத்திற்குட்பட்ட குளித்தலைப் பேருந்து நிலையத்திற்கு மேற்கு பகுதியில் உள்ள சுங்க வாயில் கிழக்குப் பகுதியில் உள்ள பெரிய பாலம் ஆகிய இந்த இரண்டுப் பேருந்து நிறுத்தங்களும் ஒரே நேர்கோட்டில் குறைந்த தூரத்தில் உள்ளதால் 2 பேருந்து நிறுத்தங்களுக்கும் "Free Lift" ஆக அறிவிக்க வேண்டுமாய் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பதிவுத் துறை சார்பாக, 1864 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பதிவுத் துறையானது, தற்பொழுது 11 மண்டல அலுவலகங்கள், 56 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள், 582 சார்பதிவாளர் அலுவலகங்களைக் கொண்டு பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கி வருகிறது.

ஆவணங்கள் பதிவு செய்தல், அறக்கட்டளை மற்றும் தொண்டு நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், சீட்டு நிதி நிறுவனங்கள், பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் போன்ற முக்கிய பணிகளைப் பதிவுத்துறை வழங்கி வருகிறது. எங்களது குளித்தலை தொகுதியில் நங்கவரம் மற்றும் குளித்தலை ஆகிய இரு சார் பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது. 27 கிராமங்களை உள்ளடக்கிய குளித்தலை சார் பதிவாளர் அலுவலகம் 1865 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கி 160 ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றி வருகின்றது. திராவிட மாடல் ஆட்சியில் பதிபுத்துறையில் 45 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்களும், 3 ஒருங்கிணைந்த மாவட்டப் பதிவாளர் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளதில் திராவிட பேரரசர் தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்களது குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் ரூ.2.52 கோடி மதிப்பீட்டிலே புதியக் கட்டடம் கட்டப்பட்டு கடந்த 632025 அன்று காணொளிக் காட்சி மூலம் தங்களின் திருக்கரங்களால் திறந்து வைத்துதுள்ளார்கள். அதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவில் மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை!

திராவிட மாடல் ஆட்சியில் பொதுமக்களின் நலன் கருதி பதிவுத் துறையில் tatkal token பதிவு முறை, மூத்தக் குடிமக்களுக்கு முன்னுரிமை, இணைய வழி அட்டவணை திருத்தம், சிறப்பு வசதி கொண்ட அதிநவீன கேமராக்கள் போன்ற செயல் முறைகள் மற்றும் சிறப்பான வசதிகளால் பொதுமக்கள் பெரிதும் பயனடைந்து வருகின்றார்கள்.

பிற நிலங்கள் தவறாக பதிவுச் செய்வதைத் தடுக்கும் வகையிலும், நில உரிமைதாரர்களுக்கு பாதுகாப்பு அளித்திடும் வகையிலும், அரசு நிலங்களைத் தவறுதலாக பதிவு செய்வதை தடுத்துப் பாதுகாக்கும் வகையிலும் திராவிட மாடல் ஆட்சியில் பதிவுத் துறை நவீன மயமாக்கப்பட்டு STAR 2.0 மென்பொருள் உருவாக்கப்பட்டு உள்ளது.

தற்போதைய தொழில் நுட்பங்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியங்கு முறைகளைப் பயன்படுத்தி, கணினி மயமாக்கலில் அடுத்தக் கட்ட சேவைகளுக்காக, மறு சீரமைப்பு மேற்கொள்ளும் வகையில் STAR 3.0 திட்டத்தை செயல்படுத்தி ரூ.323 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளதால் மேலும் பதிவுத் துறை பொதுமக்களுக்கு சிறந்த சேவைவை வழங்கும்.

முத்திரைத் தீர்வை செலுத்துவதற்கான மாற்று முறையாக மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் மின்னணு முத்திரைத் தீர்வை செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தோகைமலையிலேயே புதிய சார் பதிவாளர் அலுவலகம்!

பதிவுத் துறை சார்ந்த ஒரு கோரிக்கையை சொல்லிவிடுகிறேன். குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியத்திலுள்ள 20 ஊராட்சிகளில் சமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். இப்பகுதி மக்கள் பத்திரப் பதிவு பணிகளுக்காக கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களிலுள்ள ஐந்து அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய சிரமமான சூழ்நிலையில் உள்ளனர். ஆகவே, அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தோகைமலையிலேயே ஒருங்கிணைந்த புதிய சார்பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமாய் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'சட்டமன்றம் இயற்றிய சட்டங்களுக்கு யாரும் தடைபோட முடியாது' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கான உரிமைகளையும் பெற்றுக் கொடுத்துள்ள மாநில சுயாட்சிப் போராளியே! வரும் தேர்தலில் தமிழ்நாட்டின் எதிரிகளையும், துரோகிகளையும் வரலாறு காணாத வகையில் தோல்வியுறச் செய்யும் மக்கள் போற்றும் முதல்வர் அவர்கள் நீடுழி வாழ வேண்டும் என்று வாழ்த்தி, வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்! (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதி கோரிக்கைகள்:

பஞ்சப்பட்டி ஏரிக்கு மாய